Considering all these difficulties, will the Government at least as an experimental measure try to extend the State buses that stop at Krishnagiri to Hosur?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The experimentation should not be at the risk of economy.

நாகர்கோயில்—தூத்துக்குடி பேருந்து பணிகள்

*** 563. வினு—திரு. நா. சௌந்தரபாண்டியன்:**
திரு. டி. மார்டின்: } மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவிலுக்கும், தூத்துக்குடிக்குமிடையே கடற்கரை சாலே (East Coast Road) வழியாக அரசாங்க சாதாரண பஸ்களும் துரித பஸ்களும் விடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லே.

(இ) இக்கேள்வி எழவில்லே.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: தூத்துக்குடிக்கும் நாகர்கோவிலுக்கும் கிழக்குக் கடற்கரை ஓரமாக பஸ் விடுவதால் பின்தங்கிய பகுதி மக்களுக்குப் பிரயோசனமாக இருப்பதோடு, இப்பொழுது அந்த சாலேயில் அரசாங்க பஸ் அதிக தூரம் ஓடிக்கொண்டிருப்பதன் காரணமாகத் தனியார் பஸ்கள் விடப்படமுடியாத நிலேமை இருப்பதனுல், அதை உத்தேசித்தாவது அரசாங்கம் இதை உடனடியாகப் பரிசீலனே செய்து அந்தப் போக்குவரத்தை அதிகப்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்பொழுது நாகர்கோவிலிலிருந்து திருச்சி வரையில் பஸ் செல்லுகிறது. நாகர்கோவிலிலிருந்து கோயம்புத்தூருக்கு பஸ் விட்டால், நாகர்கோவில், தூத்துக்குடியை இணைக்கின்ற நிலேமையும் இருக்கிறது. எனவே, கிழக்கு கடற்கரை ஓர சாலேயில் துரித பஸ்கள் விடுகின்ற உத்தேசம் இப்பொழுது இல்லே.

திரு. டி. மார்டின்: மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த ரோடு அதிகமான மீன்வளம் உள்ள கிராமங்களேயெல்லாம் இணைத்துச் செல்கின்ற காரணத்தினுல், அந்தக் கிராமங்களில் அதிகமான அளவில் மீன் வியாபாரம் போன்றவைகளெல்லாம் நடைபெறுகின்ற காரணத்தினுல், கிராமங்களிலுள்ள வியாபாரிகள் அங்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே, துரித பஸ்களே விடமுடியாவிட்டாலும், சாதாரண அரசாங்க பஸ்களே விடுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : There is no proposal to operate a route from Nagercoil to Tuticorin via the coastal road either with ordinary or with express services, in view of the commitment on nationalisation of passenger bus transport.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தூத்துக்குடி ஒரு முக்கிய துறைமுகமாக இருக்கிற காரணத்தினுல், ஒரு வணிகஸ்தலமாக இருக்கிற காரணத்தினுலும், சாதாரண பஸ்களே விடுவதற்கு அரசு புனராலோசனே செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா: தூத்துக்குடிப் பிரதேசத்தில் நிறைய பஸ்கள் இருக்கின்றன. கடலோரப் பாதையில் பஸ்களே விடுவதற்கான செயற்குறிப்பு தற்பொழுது அரசாங்கத்தின் கவனத்தில் இல்லே.

[1970 மார்ச் 26]

திரு. என். துரைபாண்டியன் : கன்யாகுமரி, ராமேசுவரம் ஆகிய இரண்டு இடங்களும் புண்ணியஸ்தலங்களாக இருப்பதினால், அவை இதே ரோடில் இருப்பதனால், கன்யாகுமரிக்கும் ராமேசுவரத்திற்கும் இரண்டு துரித பஸ்கள் விடுவதாக கடந்த அரசு முடிவு செய்திருந்தது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படிச் செய்தால் தூத்துக்குடி, நாகர்கோவில் கனெக்ட் ஆகும். ஆகவே, இதை துரிதப் படுத்தி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடந்த அரசு புண்ணியஸ்தலங்களுக்கு பஸ்கள் விடுவதாக முடிவெடுத்தது பற்றிய செயற்குறிப்பு என்னிடம் இல்லை. தற்பொழுது அது போன்ற ஒரு செயற்குறிப்பும் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : கன்னியாகுமரி, ராமேசுவரத்திற்கு போவதாக இருந்தால் தற்பொழுதுள்ள பஸ் ரூட் வழி 280 மைல். கோஸ்டல் ரோடு வழியாகப் போனால் தூரம் 140 மைல். கோஸ்டல் ரோடு வழி யாகப் போனால் 140 மைல் தூரம் குறைவாக இருக்குமாதலாலும், மக்கள் குறைந்த கட்டணத்தில் போவதற்கு வசதியாக இருக்குமாத லாலும், இனிமேலாவது கோஸ்டல் ரோடு வழியாக கன்னியாகுமரி, ராமேசுவரத்திற்கு துரித பஸ்களை விடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க புனராலோசனை செய்யுமா இந்த அரசு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பி னர் சொன்னபடி மறுபரிசீலனை செய்யலாம்.

அரசுப் போக்குவரத்துப் பணிக் களரிகளில் பெட்ரோல் நிலையங்கள்

* **564 வினா.—திரு. கே. சகாதேவ கவுண்டர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துத் துறை, (i) சென்னை மாநகரிலும் (ii) மாவட்டங்களிலும் உள்ள தனது பணிக் களரிகளில் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் உடனுழைப்புடன் பெட்ரோல் நிலையங்களை அமைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (i) ஆம்.

(ii) இல்லை.

திரு. கே. சகாதேவக் கவுண்டர் : இந்த பெட்ரோல் நிலையங்கள் அமைப்பதற்காக சர்க்கார் எவ்வளவு முதலீடு செய்திருக்கிறது? அதி லிருந்து சர்க்காருக்கு எவ்வளவு லாபம் கிடைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : லாப நஷ்ட கணக்கே கிடையாது

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் வொர்க்ஷாப், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் நிற்கும் இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள இண்டியன் ஆயில் பங்குகளை மாலை நேரம் ஆகிவிட்டால் மூடிவிடுகிறார்கள். ஆகையினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான பல வண்டிகள் வெளியார் பங்குகளுக்குப் போய் பெட்ரோல், டீசல் பிடிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அந்த பங்குகளெல்லாம் 24 மணி நேரம் வேலை செய்யக்கூடிய அளவுக்கு ஆட்களைப் போட்டு அந்த பங்குகளை நடத்துவ தற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனியார் பங்குகளில் மாலை வேலைகளில் டீசல், பெட்ரோல் பிடிப்பதற்கான ஏற்பாடு இருப்பதாக செயற்குறிப்பு இல்லை. அப்படிக் குறைபாடு இருக்கு மானால், அதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும்.